ஆனால் இதற்கிடையிலே நிலநீர் ஆணையாளர் அந்தத் திட்டம் இங்கே வரக்கூடாது என்று வலியுறுத்திய காரணத்தால் அந்தத் திட்டம் அப்போது செயல்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

நாம் திரும்பவும், இவ்வளவு செலவழித்ததற்குப் பிறகு ஏதாவது செய்ய வேண்டும் என்று கருதி இந்தத் திட்டம் ஏன் நிறுத்தப்பட்டது என்பது பற்றிப் பார்த்தோம். பிறகு கடைசியாக நீர்வளம், அதாவது ஹைட்ராலஜி எப்படி இருக்கின்றது என்று ஒரு மூன்று ஆண்டுகளுக்கு சர்வே செய்து 982 ஏப்ரலுக்குள்ளாக அறிக்கை கொடுக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அதன் அடிப்படையிலே மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று முடிவு எடுக்கலாம் என்பது பற்றி அரசு யோசிக்கும்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கொடுமுடியாறு திட்டம் சம்பந்தமான பிரச்சினை நான்கைந்து ஆண்டுகளாக கிளப்பப்பட்டு வருகின்றது. ஒரு பெரிய மனிதரின் நிலம் இந்தத் திட்டத்தின் காரணத்தால் கொஞ்சம் தண்ணீரில் மூழ்குகிறது என்ற காரணத்தால் அவர் தடுத்ததாகவும், அதனால்தான் இந்தத் திட்டம் நிற்கின்றது என்றும் அந்தப் பகுதியிலே உள்ள பெருவாரியான மக்கள் பேசுகிறார்கள். மூன்றாண்டு காலத்திற்கு தண்ணீர் வரத்து எவ்வளவு என்று கணக்கிட்டு அங்கே ஒரு அணை கட்டலாம் என்றுதான் பரிந்துரை செய்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன்.

அந்தப் பெரிய மனிதருடைய முட்டுக்கட்டையை உடனடியாக தடுத்து நிறுத்தி அந்தப் பகுதியிலுள்ள பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பயன்பெறக்கூடிய அந்தத் திட்டத்தை சீக்கிரமாக நிறைவேற்ற அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. கே. இ. ராஜாமுகமது: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை அரசு கவனத்தில் கொள்ளும். ஏப்ரல் மாதத்திற்குள்ளாக அதாவது இந்த மாதத்திற்குள்ளாக அறிக்கை வரவேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். இன்னும் 26 நாட்கள்தான் இருக்கின்றன. ஆகவே, அது வந்தவுடன் அதைப் பார்த்து பரிசீலனை செய்து எவ்வளவு விரைவிலே அந்தத் திட்டத்தைப் பற்றி யோசிக்க முடியுமோ அந்த அளவுக்கு யோசிக்கலாம்.

தமிழ்நாட்டில் காற்றாலை கழகம் அமைத்தல்.

* வினா எண் 731— திரு மா. சின்னராஜு: திரு. செ. செம்மலை மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தமிழ்நாட்டில் Wind Mill Corporation ஏற்படுத்தும் செயற் குறிப்புஅரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: இல்லை.

திரு. எம். சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விண்ட் மில் என்பது மின்சார சக்திக்கு ஒரு மாற்று சக்தியாக அமைகின்ற ஒரு திட்டம். விவசாயிகள் எளிதில் அமைத்துக்கொள்கின்ற வாய்ப்பு இருக்கின்றது. அதற்கு ஏற்ற சீதோஷ்ண நிலைமையும் நமது நாட்டிலே ஏதுவாக இருக்கின்றது. ஜெர்மன் நாடுகளில் கூட இந்தத் திட்டம் ஊக்குவிக்கப்படுகின்றது. இந்தத் திட்டத்தினை நாம் நிறைவேற்றினால் விவசாயத்திற்குத் தேவையான மின்சாரத்தை மிச்சப்படுத்த முடியும். அப்படி ஒரு நல்ல திட்டமாக இருப்பதால் மீண்டும் அரசு இதனைப் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, காற்றினுடைய சக்தியைப் பயன்படுத்த ஏதுவாக உள்ள இடங்களில் காற்றாலைகள் அமைப்பது என்ற அந்தத் திட்டத்தை அரசு ஏற்றுக்கொண்டிருக்கின்றது. அதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

பூண்டியிலுள்ள ஆய்வுக்கூடத்திலே கூட ஏழை விவசாயிகளுக்குக் குறைந்த விலையிலே விண்ட் மில் கிடைக்க என்ன செய்யலாம் என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள் ஆகவே அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த விரும்புகிறது. ஆனால் இதற்காகத் தனியாக ஒரு நிறுவனம், கார்ப்பரேஷன் அமைக்க வேண்டுமா என்பதுதான் மூலக்கேள்வி. இதுவரையில் அந்தக் கருத்து பரிசீலனைக்கு வரவில்லை. அரசினுடைய செயற்குறிப்பிலேயும் அது இல்லை என்பதைத்தான் நான் தெரிவித்தேன்.

திரு. மா. சின்னராஜ்: தலைவர் அவர்களே, இதுபோன்ற நல்ல திட்டங்களை விரைவாகச் செயல்படுத்துவதற்கும், அரசின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து கடன் பெற்று தீவிரமாகச் செயல்படுத்துவதற்கும் கார்ப்பரேஷன் அமைப்பு நல்ல முறையிலே பயன்படும். ஆகவே அதை நிறைவேற்றுவது பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, இதற்கு ஒரு தனிக்கவனம் கொடுத்துச் செய்தால் இன்றைக்கு இருக்கக்கூடிய மின்சாரப் பற்றாக்குறை மற்றும் டீசல் விலை உயர்வு ஆகியவற்றைத் தவிர்க்கலாம் என்ற எண்ணத்தில்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். இது மத்திய அரசின் கவனத்திலேயும் இருக்கக்கூடிய ஒரு முக்கியமான திட்டமாக இருக்கின்றது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தினை அடிப்படையாக வைத்து வேண்டுமானால் இது குறித்து மீண்டும் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1982 ஏப்ரல் 2]

(முற்பகல் 10.00)

திரு. செ. செம்மலை: இதுபோன்ற காற்றாலைகளைப் பயன்படுத்தி யு.பி. போன்ற மாநிலங்களில் வெற்றிகரமாக நடைபெறுவதாகச் சொல்கிறார்கள். யு.பி. அரசு இதுபோன்ற காற்றாலை தயாரிக்கிற தொழிற்கூடங்களுக்கு நிதி உதவி அளிப்பதாகச் சொல்கிறார்கள். திரு. சின்னராசு அவர்கள் சொன்னது போல் தமிழ்நாட்டிலும் இதுபோன்ற கழகத்தை அமைக்க வாய்ப்பு இருக்குமானால் அரசு அப்படிப்பட்ட திட்டத்தை நிறைவேற்ற உதவி செய்யுமா? இதற்கான உதவியைச் செய்ய மத்திய அரசிடம் மாநில அரசு உதவி கேட்டுப்பெறுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மத்திய அரசின் உதவியோடு இத்திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்றுதான் மாநில அரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. மத்திய அரசும் இப்படிப்பட்ட திட்டத்தை ஊக்குவிக்கவேண்டும் என்றுதான் அவர்களும் நம் ஆய்வறிக்கைகளை கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல் கடற்கரைப்பகுதிகளில் இந்தமாதிரியான திட்டத்தை நிறைவேற்ற நிரம்ப வாய்ப்பிருக்கிறது. தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 900 கிலோ மீட்டர் தூரத்திற்கு கடல் பரப்பு பகுதி உள்ளதாக கணக்கு எடுத்து வைத்திருக்கிறோம். அதையெல்லாம் மனதில் கொண்டு இதைச் செய்யமுடியும். யு.பி.யில் தனியார் நிறுவனங்கள் ஆண்டுக்கு 100 முதல் 200 வரை காற்றாலை உற்பத்தி செய்யும் திறன் பெற்றிருக்கிறது. அந்த அரசு உதவி செய்வதாக குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன. அவைகளையும் இப்போது ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம்.

Amount Received Under the Investment Subsidy Scheme.

Q. No. 73[illegible] THIRU R. UMANATH will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the total amount this Government has received from the Central Government during 1978-1979, 1979-1980 and 1980-1981 under Investment Subsidy Scheme and

(b) the total number of Industries benefited by the scheme

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:

ஆண்டு.		(ரூ. இலட்சத்தில்.)
1. 1978–79	..	220.63
2. 1979–80	..	165.57
3. 1980–81	..	425.35
		820.55